
கொடுக்கப்பட்ட பயிற்சியைச் செய்யவும். சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.




வரதன் தனக்கு அளித்த காற்பந்துக் குழுவின் தலைவர் பொறுப்பில் நேர்மையை எவ்வாறு கடைப்பிடிப்பான்? பட்டியலிடுக.




பணிவாக பேசுதல்

குழு உறுப்பினர்களிடம் உண்மையாக நடந்துக் கொள்தல்

வேலைகளைச் சமமாக பகிர்ந்துக் கொடுத்தல்

அன்பாக பழகுதல்

விதிமுறைகளைப் பின்பற்றுதல்

கோபமாக பேசுதல்

LIVEWORKSHEETS

பாடம் 7

## நேர்மையோடு வாழ்வோம்

முரளி : தங்கள் வீட்டின் சுவரில் எழுதப்பட்டுள்ள வரிகள் கருத்துள்ளவையாக இருக்கின்றன தாத்தா.

தாத்தா : ஆம் முரளி, வாழ்க்கையில் நேர்மைக் குணம் மிகவும் அவசியம் ஆயிற்றே. அதை முதலில் அண்டை அயலாரோடு செயல்படுத்த வேண்டும்.

முரளி : எப்படித் தாத்தா?

தாத்தா : அண்டை அயலாரோடு எப்போதும் பொய் பேசுதல் கூடாது. அதே நேரத்தில், மகிழ்ச்சிப்படுத்த வேண்டும் என்பதற்காகக் காரணமே இல்லாமல் புகழ்ந்து பேசுதலும் கூடாது. எப்போதுமே வெளிப்படையாக உண்மையைப் பேசுதலே சாலச்சிறந்தது முரளி.

முரளி : நானும் அதையே கடைப்பிடிப்பேன் தாத்தா.




**1** அண்டை அயலாரோடு நேர்மையுடன் நடந்து கொள்வதற்குத் தாத்தா கூறும் அறிவுரைகளைப் பட்டியலிடுக.

- பொய் கூறாதே
- மறைத்துப் பேசாதே
- பொய் கூறுதல்
- உண்மையாகப் பேசுதல்
- நேர்மையாக இருத்தல்
- வீண்புகழ்ச்சி கூடாது
- வெளிப்படையாக பேசு
- புகழ்ந்து பேசுதல்

LIVEWORKSHEETS